முதன்மை தொழிலாளர் நீதிமன்றம் வேலூர், வேலூர் மாவட்டம்

ஐ.டி.எண். 5/2013 29.07.2026

தொ.த.சாட்சி – 1 திரு.சந்திரசேகரன்
குறுக்கு விசாரணை தொடர்ச்சி

WW5 ஆவணம் எனது லீவ் ரெக்கார்ட். நான் எச் ஆர் இடம் அந்த ஆவணத்தை பெற்றுக் கொண்டேன். அந்த ஆவணத்தில் கம்பெனியின் பெயர் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் எந்த தேதியில் என்னிடம் கொடுத்தார்கள் என்று சொல்லி உள்ளேன் என்றால் சொல்லவில்லை .வேலையை விட்டு அனுப்பும் பொழுது எச் ஆர் மேடம் என்னிடம் கொடுத்ததாக சொல்லி உள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த ஆவணம் நிறுவனத்தில் இல்லை என்றும் வழக்குக்காக இந்த ஆவணம் தயார் செய்யப்பட்டு ஆஜர் படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் தொழிலாளர் அலுவலர் மற்றும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள கிளைம் ஸ்டேட்மெண்டில் இதுகுறித்து நான் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கோரிக்கை மட்டும் தான் அங்கு வைப்போம் ஆவணங்கள் ஆஜர் படுத்த வேண்டிய அவசியம் இல்லை. அதில் உள்ள அதிகாரியின் கையெழுத்து போர்ஜெரி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. WW6 ஆவணத்தில் எல்என்டி நிறுவனத்தின் சீல் உள்ளது என்றால் சரிதான்.முதல் பக்கத்தில் எனது பெயர் இல்லை என்று சொன்னால் சரிதான். WW6 ஆவணத்தில் இன்ஸ்பெக்ஷன் ரிப்போர்ட் தனிதனி ஆவணம் தான் என்று சொன்னால் அது ஒரே ஆவணம் தான். முதல் பக்கத்தில் உள்ள தேதி 27.7.2011 என உள்ளது என்றால் சரிதான். இரண்டாவது பக்கத்தில் உள்ள தேதி 31.10.2011 என உள்ளது என்றால் சரிதான். முதல் பக்கம் வெண்டாரின் டீடைல்ஸ் மற்ற பக்கங்கள் கம்பெனியின் குவாலிட்டி ப்ரொடக்சன் டிபார்ட்மெண்டில் யார் அந்த வேலை செய்கிறார்களோ அவர்களின் இன்ஸ்பெக்சன் ரிப்போர்ட். நான் சொல்வது சரியல்ல என்றும் அந்த ஆவணம் தனித்தனி பக்கங்கள் என்றும் வெவ்வேறு பயன்பாட்டிற்காக அதை பயன்படுத்துகிறார்கள் என்று

சொன்னால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் முதல் பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் கையால் எழுதப்பட்டவை நான் எழுதியதாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஆறு இடங்களில் எனது கையெழுத்து உள்ளது. நான் ஐடிஐ ஃபிட்டர் படித்துள்ளேன். அதற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவில்லை தேவை என்றால் ஆஜர் படுத்த தயாராக உள்ளேன்.அந்த ஆவணத்தில் சந்திரசேகர், சுரேஷ் பாபு என்று உள்ளது என்றால் சரிதான். கீழே உள்ள எஸ். சந்திரசேகரன் என்றது எனது கையெழுத்து தான். சுரேஷ்பாபுவின் கையெழுத்து அதில் இல்லை என்று சொன்னால் சரிதான். அடுத்து உள்ள பக்கங்களிலும் சுரேஷ் பாபுவின் கையெழுத்து இல்லை என்று சொன்னால் சரிதான். சுரேஷ் பாபு என்பவர் குவாலிட்டி டிபார்ட்மெண்டில் குவாலிட்டி இன்ஸ்பெக்டராக வேலை பார்த்து வருகிறார். சுரேஷ் பாபு தற்பொழுது வேலையில் உள்ளாரா என்று எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை நான் தயார் செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சுரேஷ் பாபுவின் கையெழுத்தை போட்டால் அவரை விசாரிப்போம் என்று தெரிந்து கொண்டு அவரது கையெழுத்தை நான் போடவில்லை என்று சொன்னால் சரியில்ல. டெக்னிக்கல் இன்ஸ்பெக்ஷன் டீடைல்ஸ் அனைத்தும் அவருக்கு தான் தெரியும் என்று எனக்கு தெரியும் என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஜாப்பை உருவாக்கியதே நான்தான் அப்படி இருக்கையில் எனக்கு எவ்வாறு தெரியாமல் இருக்கும். பிரமாண வாக்குமூலத்தில் இந்த ஜாப்பை நான் தான் உருவாக்கினேன் என்ற விபரத்தை நான் தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். ஆவணம் ஆஜர் படுத்தப்பட்டதால் அதை நான் தெரிவிக்கவில்லை. முதல் எதிர்மனுதாரர் வழக்கு சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு நியமன ஆணையை ஆஜர் படுத்தவில்லை என்று சொன்னால் நிறுவனம் எங்களுக்கு தரவில்லை அதைக் கேட்டோம் தராததால் எங்களால் ஆஜர் படுத்த இயலவில்லை அதைக் கேட்டதால் தான் வெளியே அனுப்பினார்கள். மாத ஊதியத்தை வங்கி கணக்கு மூலமாக தான் செலுத்துவார்கள். அந்த வங்கி கணக்கு பட்டியல் பார்த்தால் அதில் பணம் செலுத்தி இருக்கிறார்கள் என்று தெரியும் என்று சொன்னால் அவர்கள்

வேறு யார் பேரிலும் போட்டு இருக்கலாம் அது எப்படி எங்களுக்கு தெரியும். வங்கி கணக்கில் இருந்து எனது வங்கிக் கணக்குக்கு பணமாக செலுத்தப்பட்டதா என்றால் வேலைக்கு உண்டான சம்பளம் மட்டும் வந்தது தெரியும் யார் செலுத்தினார்கள் என்ற விவரம் தெரியாது இ எஸ் ஐ பி எப் சலுகைகள் இருந்தது. இ எஸ் ஐ அடையாள அட்டையோ பிஎப் இக்கான கணக்கு பட்டியலோ ஆஜர் படுத்தவில்லை என்று சொன்னால் நிர்வாகம் அதை பராமரித்து வந்தார்கள் நாங்கள் கேட்டோம் அவர்கள் கொடுக்கவில்லை அதனால் எங்களால் ஆஜர்ப்பட்ட இயலவில்லை அந்த இரண்டு அதிகாரிகளுக்கும் அடையாள அட்டை மற்றும் கணக்கு படிவம் கேட்டதாக அவர்கள் கொடுக்கவில்லை என்று புகார் அனுப்பினோமா என்றால் அந்த நேரத்தில் கொடுக்கப்படவில்லை தொழிலாளர் அலுவலகத்தில் புகார் கொடுக்கும் பொழுது இ எஸ் ஐ மற்றும் பி எப் கணக்கு பட்டியல் தரப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் கொடுத்தோமா என்றால் வேலை நீக்கம் செய்யப்பட்டதால் வேலை மட்டும் தான் கேட்கும் கேட்டோம் இது சம்பந்தமாக புகார் ஏதும் கொடுக்கவில்லை. முதல் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் மீது மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம்.ம், அதிகாரி மற்ற எதிர்மனுதாரர்களை சேர்த்தார்களா என்றால் சென்னையில் விசாரணை நடக்கும் பொழுது மற்ற எதிர்மனுதாரர்களை அவர் வரவழைத்து விசாரித்தார்கள். அரசாங்கத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு வழக்கு அனுப்பப்பட்டு விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டது என்று தெரியும். அதில் மற்ற எதிர்மனுதாரர்களின் பெயர் உள்ளது என்று சொன்னால் தொழிலாளர் ஆணையர் அவர்களை விசாரித்த காரணத்தினால் அதிலும் அவர்களின் பெயர் உள்ளது. கிளைம் ஸ்டேட்மெண்டில் மற்ற எதிர்மனுதாரர்கள் இந்த வழக்கில் தேவையற்ற நபர்கள் என்று நான் சொல்லவில்லை என்று சொன்னால் அவர்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை அதனால் சொல்லவில்லை. 2009 முதல் 2012 வரைவிலான காலகட்டத்தில் சம்பளம் யார் செலுத்துகிறார்கள் என்று தெரியாது மற்ற எதிர்மனுதாரர்களுக்கு எங்களுக்கும் சம்பந்தமில்லை என்றும் முதல் எதிர்மனுதாரர் பணி நியமன உத்தரவு வழங்கவில்லை என்பதை பற்றி புகார் கொடுக்கப்பட்டதா என்றால் நிர்வாகத்தின் அதிகாரிகள் இடம் நாங்கள் கேட்ட பொழுது அவர்கள் இப்பொழுது

தருகிறோம் அப்பொழுது தருகிறோம் என்று நேரத்தை கடத்தி வந்தார்கள் அவர்களிடம் தான் கேட்டோம் வெளி அதிகாரிகள் யாரிடமும் புகார் கொடுக்கவில்லை எங்களுடன் வேலைக்கு சேர்ந்தவர்கள் சிலரை அப்பாயின்மென்ட் செய்தார்கள் அந்த நம்பிக்கையில் நாங்கள் இறந்து விட்டோம். எங்களுடன் வேலைக்கு சேர்ந்த சக்திவேல் இளங்கோவன் சுரேஷ் பாபு, லோகநாதன், ராமச்சந்திரன், மூர்த்தி போன்ற பலரை நிரந்தர பணியாளர் ஆக்கினார்கள். நிரந்தரம் செய்வதற்கு முன்னர் அவர்களும் எங்களை மாதிரி தான் வேலை பார்த்தார்கள் ஒப்பந்தக்காரர்களிடம் வேலை பார்த்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஒப்பந்த தொழிலாளர் சட்டப்படி பேக்ட்ரி இன்ஸ்பெக்டரிடம் எங்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று நான் மனு கொடுத்தேனா என்றால் ஆரம்பத்தில் எங்களது ரெப்ரசன்டேட்டு பாபு அவர்கள் ஆலோசனைப்படி தான் செய்து வந்தோம் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நீதிமன்றம் தொழிலாளர் அலுவலர் தவிர பேக்டரிஸ் டிபார்ட்மென்ட் ல் விசாரணைக்கு சென்றோமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை போராட்டம் செய்யும் பொழுது வட்டாட்சியர் அலுவலகத்தில் நிறைய அலுவலர்கள் வந்திருந்தார்கள் அப்பொழுது வேண்டுமானால் பேசி இருக்கலாம். ஒப்பந்த தொழிலாளர் சட்டத்தின் கீழ் எங்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கோரி நாங்கள் மனு செய்தோம் என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை ஞாபகம் இல்லை என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.பத்தி 65இல் வேலை நீக்கம் உத்தரவு அபராஜித்தா நிறுவனம் மூலம் வந்ததாக சொல்லி உள்ளேன் என்று சொன்னால்அதை நிர்வாகம் சொன்னதாக தான் சொல்லி உள்ளோம். பணி நீக்கம் உத்தரவு எந்த எதிர்மனுதாரரும் கொடுத்ததாக நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவில்லை என்று சொன்னால் வாய்மொழியாக தான் சொன்னார்கள் அதை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளோம். 2010−2011 ஆம் வருடத்தில் நிரந்தர பணியாளர் பணியாளர்களுக்கான காலியிடம் உள்ளதாக அதை நிரப்புவதற்காக அட்வர்டைஸ்மென்ட் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. சக்திவேல் இளங்கோ சுரேஷ் பாபு மூர்த்தி மற்றும் பலர் நிரந்தர பணியாளர் மனு செய்து தான் பணி அமர்த்தபட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல அவர்கள் சீனியாரிட்டிபடி

தான் நிரந்தர பணியாளர்கள் ஆக்கப்பட்டார்கள். அவர்கள் சம்பந்தப்பட்ட பணிக்கு மனு தாக்கல் செய்து அப்படித்தான் அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. பணி நிரந்தரம் செய்யப்பட்டவர்களை எப்படி அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டார்கள் என்று கேட்டேன் என்றால் இண்டர்வியூ செய்தார்கள் அதில் என்னையும் இன்டர்வியூ செய்தார்கள் அவர்களுக்கு பணி நிரந்தரம் செய்யப்பட்டது ஆனால் எனக்கு பதில் வேறு ஆள் நியமிக்கப்பட்டார்கள். பத்தி 29 இல் அவர்கள் பணியின் நிரந்தரம் செய்யப்பட்ட விபரம் தெரியும் என்று நான் சொல்லி உள்ளேன் என்று சொன்னால் நிரந்தரம் செய்தது தெரியும்.பத்தி 13 இல் மிகை நேர பணி செய்ததற்கான ஊதியம் கொடுக்கவில்லை என்று சொல்லி உள்ளேன் இது சம்பந்தமாக எந்த அதிகாரியிடம் ஆவது புகார் கொடுக்கப்பட்டதா என்றால் நிர்வாகத்தின் அதிகாரிகள் எங்களை பணி வந்துள்ளது வேலை செய்யுங்கள் என்று சொன்னார்கள் அட்ஜஸ்ட் செய்து செய்யுங்கள் பின்னர் அதற்கு உண்டான ஒற்றை செய்கிறோம் என்று சொன்னார்கள் அதை வைத்து நாங்கள் மிக நேரம் பணி செய்தோம். பத்தி 14 பல ஆண்டுகள் நாங்கள் வேலை பார்த்து வந்த காலகட்டத்தில் ஏஇஎஸ் சிவசக்தி என்ற நிறுவனம் மூலம் சம்பளம் பெற்றுக் கொண்டதாக சொல்லி உள்ளேனா என்றால் ஆரம்ப கட்டத்தில் அவ்வாறு கையெழுத்து வாங்கினார்கள் நாங்கள் கேட்ட பின்னர் அதை நிறுத்தி விட்டார்கள் இது சம்பந்தமாக எந்த துறை அதிகாரியிடமும் நாங்கள் புகார் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. வழக்கு சம்பந்தப்பட்ட குமரன் 02.09.2015 தேதி முதல் அரசு துறையில் வேலை பார்க்கிறார் என்று சொன்னால் சொல்லி உள்ளேன். வழக்கு சம்பந்தப்பட்ட பணியாளர்கள் வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் எந்தெந்த இடத்தில் பணி செய்கிறார்கள் எவ்வளவு சம்பளம் வாங்கினார்கள் என்ற விபரத்தை சொல்லி உள்ளோமா என்றால் எனக்கு தெரிந்தவரை யாரும் வேலை செய்யவில்லை. பல பேருக்கு திருமணம் ஆகி குழந்தைகள் உள்ளன என்று சொன்னால் சரிதான். அவர்கள் எவ்வாறு வேலை இல்லாமல்குடும்பம் நடத்துகிறார்கள் என்ற விபரம் சம்பந்தப்பட்டவர்களை கேட்டால் தான் தெரியும் என்று சொன்னால் சரிதான். அதிக பச்சமாக அனைவரும் விவசாய நிலம் வைத்துள்ளார்கள் அதை வைத்து அவர்கள் அட்ஜஸ்ட் செய்வார்கள் என்னை பொருத்தவரை

நான் விவசாயம் நிலம் வைத்துள்ளேன் மாடு வைத்துள்ளேன் அதை வைத்து அட்ஜஸ்ட் செய்கிறேன். பலர் நிரந்தர வேலையில் இருக்கிறார்கள் என்றும் இல்லை என்று வழக்குக்காக தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பத்தி 66 இல் பேச்சுவார்த்தையின் பொழுது முதல் எதிர்மனுதாரர் எங்களுக்கு வேலை கொடுப்பதாக சொன்னார்கள் என்று சொல்லி உள்ளேன் என்று சொன்னால் ஆணையர் தான் சொன்னார்கள். ஆனால் நாங்கள் நிறுவனத்திற்கு சென்ற பொழுது அவர்கள் வேலை கொடுக்க மறுத்து விட்டார்கள்.நான் சொல்வது தவறு என்றும் பிரமாண வாக்குமூலத்தில் முதல் எதிர்மனுதாரர் நிறுவனம் பேச்சுவார்த்தையின் பொழுது வேலை கொடுப்பதாக தான் சொல்லி உள்ளேன் அதே நிலையில் வேலை கொடுப்பதாக தான் சொல்லி உள்ளேன் என்று சொன்னால் ஆணையர் சொன்ன விபரத்தை முதல் எதிர்மனுதாரர் ஏற்றுக்கொண்டார் அவ்வாறு வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றும் வழக்குக்காக யோசித்து சாட்சி மன்னிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஆமா நாங்கள் வேலைக்கு சென்ற பொழுது அபராஜீத்தா நிறுவனம் மூலம் வேலை செய்ய சொன்னதால் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றால்சரிதான் நிர்வாகம் தான் எங்களுக்கு வேலை கொடுப்பதாக சொன்னார்கள் ஆனால் அங்கு சென்றவுடன் அபராஜீத்தா நிறுவனம் மூலம் வேலை பார்க்க சொன்னதால் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதே நிலையில் வேலை கொடுப்பதாக முதல் எதிர்மனுதாரர் தெரிவித்தார்கள் அதே நிலை என்ன என்பதை நாங்கள் தொழிலாளர் அலுவலகரிடம் கேட்டோமா என்றால் அதே நிலை என்பது நாங்கள் முதலில் எப்படி வேலை பார்த்தோமோ எந்தெந்த பணியில் இருந்தோமோ அதே பணியை கொடுக்க சொன்னோம் ஆணையர் அதை ஏற்றுக் கொண்டு எதிர் மனுதாரரிடம் கேட்டார் அவர்களும் ஒப்புக்கொண்டு சென்றார்கள். வழக்குக்காக தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2 வருட காலம் தொடர்ந்து 480 நாட்கள் வேலை பார்த்ததாக படுத்தவில்லை என்று சொன்னால். எங்கள் ஆவணங்கள் அனைத்தையும் நிர்வாகம் தான் வைத்திருந்தார்கள் அவர்களிடம் கேட்டோம் அவர்கள் தரவில்லை நிரந்தரம் செய்யுங்கள் என்று கேட்டோம் அதன் பின்னர் தான் எங்களை வேலை விட்டு எடுத்தார்கள். எங்களுக்கு வேலை கொடுத்தது

வேலை வாங்கியது அனைத்தும் இரண்டு மற்றும் மூன்று எதிர்மனுதாரர்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் தான் எங்களுக்கு சம்பளம் கொடுத்தார்கள் சட்ட சலுகைகள் செய்து கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல அவர்கள் யார் என்று தெரியாத பொழுது அவர்கள் எப்படி எங்களுக்கு சம்பளம் கொடுக்க இயலும். வேலையில் இருக்கும் பொழுது நிரந்தர வேலை வேண்டும் என்று நாங்கள் வழக்கு ஏதும் போடவில்லை என்று சொன்னால் நிறுவனம் நம்பிக்கை கொடுத்தார்கள் அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான் நாங்கள் இருந்தோம். 35 நபர்களை நிரந்தரம் செய்த காரணத்தினால் நாங்கள் அவர்களை நம்பினோம். வழக்குக்காக தவறாக சொல்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. எந்த காலகட்டத்திலும் ஆட்டோமேட்டிக்காக முதல் எதிர்மனுதாரர் நிரந்தரம் செய்வதாக தெரிவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லும் 35 பணியாளர்கள் நிரந்தரம் செய்ததும் அவர்கள் தகுதியின் அடிப்படையில் செய்யப்பட்டது என்று சொன்னால் தகுதியின் அடிப்படையில் செய்யவில்லை சீனியாரிட்டி படி செய்வதாக சொன்னார்கள் அவர்களை பணி நிரந்தரம் செய்தது போல எங்களையும் பணியில் நிரந்தரம் செய்வதாக எங்களுக்கு சொன்னார்கள். இஎஸ்ஐ பிஎப் நாங்கள் வைத்துள்ளோம் என்றும் அதை ஆஜர் படுத்தினால் வழக்கிற்கு பாதகமாக அமையும் என்ற காரணத்தினால் அதை ஆஜர் படுத்த வில்லை என்று சொன்னால் சரியல்ல. தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியில்லை.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before/by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him/her to be correct.

PACKIAJOTHI Digitally signed by PACKIAJOTHI Date: 2026.07.29 17:31:42 +0530

Presiding Officer